# போர்வாள்


"போர்வாள்"

சந்தா விபரம்

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரு. | 5 0 0 |
| 6 மாதம் | ரு. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர்
வார வெளியீடு


தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 23
6—8—49 சனிக்கிழமை

வீச்சு 49


## உத்தமர் காந்தியார் உயிருடன் இருந்தால்.....!




**தன் திட்டங்கள் பறிபோவது கண்டு கண்ணீர் சிந்துவார்!**

"மது விலக்கு, குதிரைப் பந்தய ஒழிப்பு, ஆகிய திட்டங்களை இப்போது மாகாண சர்க்கார்
ள் மேற்கொள்வது தவறு என்று மத்திய சர்க்கார் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்."

—பத்திரிகைச் செய்தி.

# தலைவர் செய்த பெருந் தவறு கட்சியைச் சேரவிடோம்!

## ''பொன்னி'' இதழின் கருத்துரை!

**புதுக்கோட்டையிலிருந்து வெளிவரும் தமிழகத்தின் தலைசிறந்த கலைப் பத்திரிகையும், திராவிடர் இயக்கக் கருத்துக்களைத் திக்கெட்டும் பரப்பும் நற்பணி புரிந்துவரும் அழகிய ஏடுமாகிய ''பொன்னி'', அதன் சென்ற இதழில் தீட்டியுள்ள தலையங்கத்தில் சில பகுதிகள் :—**

1949 ஜூலை ஒன்பது! நமக்குத் துக்கநாள்! திராவிடர்தம் வரலாற்றிலேயே துயரத்தைத் தீட்டிச் சென்ற நாள்! என்றும் அழியாத பழியைத் தென்னாட்டிற்குச் சேர்த்து வைத்த நாள்! மறைக்க முடியாத, மறுக்க முடியாத, பிழையை திராவிடர்தம் பெருந்தலைவர் இழைத்தார் என்று எடுத்தெடுத்துக் காட்டும் நாள்! கழக ஊழியர்கள், மெய்த் தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர், ஆங்காங்கே கண்ணீர்விட்டும், கதறியும், வேண்டிக் கொண்டும், தம் போக்கை மாற்றாது, இன்றுதான் பொருந்தாத் திருமணம் செய்துகொண்டார் பெரியார் ஈ. வே. ரா. தம் 72-வயதில் என்று, வரப்போகும் இளைஞர்களெல்லாம் படித்துப்படித்துவருந்த வேண்டிய நாள்!

ஆம். இந்த நாளை நாம் மறக்க முடியாது; அன்று நமக்கு நேர்ந்துவிட்ட பழியையும் மறைக்க முடியாது. நாம் யாரை 'வெற்றி கொண்ட வேந்தர்'' என்றுகொண்டாடி வந்தோமோ, அவரையே அன்று பழமை எண்ணம், சமூகத்திற்கு நஞ்சு என்று கருதப்பட்டு, பேசப்பட்டுவந்த பொருந்தாத் திருமண ஏற்பாடு, வெற்றிகொண்டுவிட்டது. முப்பது வயது நிறைந்த மணியம்மையாரை அன்றுதான் மிக ரகசியமாகப் பெரியார் பதிவு மணம் செய்து கொண்டுவிட்டார்,

இச்செய்தியைத் தாங்கிவந்த ஏடுகள் தென்னாட்டில் யாருக்கும் இன்பத்தை, மாறாத மகிழ்ச்சியை நல்கியிருக்க முடியாது. அனைவரும் துயரக் கடலில் மூழ்கினர் என்றே சொல்லவேண்டும்.

தென்னாட்டு விடுதலை—திராவிடத் திருநாட்டின் பிரிவினை நிகழப் போவது உறுதி என்ற எண்ணம் வலுத்து வரும்போது, தமிழகத்தில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள ஒரே கட்சி ''திராவிடர் கழகம்'' என்று வடநாட்டு ஏடுகளே தீட்டும் நிலை வளர்ந்து வரும்போது, திராவிடர் கழகத் தலைவர், வெண்தாடி வேந்தர், வாழ்க்கை முற்றும் பொது நலமே குறிக்கோளாய்க் கொண்ட முதியவர், மாற்றுக் கட்சித் தோழர்களும் அவர்தம் மாண்பு கண்டு மதிப்பளிக்கும் நிலையில் சிறப்புற்றிருந்த பெரியார், தாம் இதுவரை பேசிவந்த, எழுதி வந்த, சமுதாய சீர்திருத்தக் கொள்கைகட்கு மாறாக, தம் கட்சி இதுவரை எந்தமுறையினைத் தவறு என்று எடுத்தியம்பி வந்ததோ, அந்த முறைப்படி, முப்பதுவயது நிறைந்த மணியம்மையாரைத் தம் 72.வது வயதில் மணம் செய்து கொள்கிறார் என்றால், கிழவன்-குமரி திருமணத்திற்குத் தாமே எடுத்துக்காட்டாய் விளங்க முன் வந்தாரென்றால் இதைவிடக் கொடுமை வேறு என்ன இருக்கமுடியும்! மேலும்தாம் செய்துகொண்ட திருமணம் சரியென்றும், எதிர்ப்பவர்கள் சூழ்ச்சிக்காரர்களென்றும் சுயநலமிகளென்றும் விளக்கம் தருகிறாரென்றால் கொடுமை கூடுகிறது என்பதைத் தவிர நாம் என்னகூற முடியும்?

திராவிடர் கழகத் தோழர்கள் பெரியாரின் போக்கு தவறுஎன்று கூறும்படி நேர்ந்திருக்கிறது; கொள்கைக்கு மாறாக நடந்துகொண்டவரின் தலைமையில் இனித் தொண்டுபுரியோம் என்று கண்டனம் செய்யவேண்டிய அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது; கட்சிக்குத் தலைவரே ஒழிய, தலைவருக்காகக் கட்சி அல்ல என்று எடுத்துக் காட்டவும், புதுத்தலைமை வேண்டும் என்று தீட்டவும் சந்தர்ப்பங்கள் உண்டாகியிருக்கின்றன; தலைவரிடம் நம்பிக்கையில்லை என்று எண்ணற்ற கழகங்கள் தீர்மானிக்கும் நிலை வந்திருக்கிறது.

பெரியார் தம் குற்றத்தை மறைக்க, மற்றவர்களைச் சதிகாரர்கள் என்னுமளவுக்குப் பழி கூட்டுவிக்க முயற்சிக்கிறார்; ''விடுதலை'' பெரியாருக்கு 'ஆதரவு' தேடுகிறது; தோழர் வேதாசலம் எவ்வகையிலும் திருமணத்தை நிறுத்தும்படி தீர்மானம் போட்டுவிட்டு, ''எது பொருந்தாத் திருமணம்?'' என்று அறிக்கை விடுகிறார்; மேலும் சிலர் 'திருமணம் பொருத்தமானதுதான் என்றுகூற ''விடுதலை''க்குக்கிடைத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை, அச்சிலரைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை; திராவிடப் கழகத் தோழர்களனைவரும் (ஒன்றிரண்டு பத்துவரை எண்ணி நீக்கிவிடலாம்) ஒரு முகமாகப் பெரியாரின் இப்போக்கை ஆதரிக்கத் தயாரில்லை; ஆனால் அதற்காகக் கட்சியை விட்டுப்போகவும் அவர்கள்விரும்பவில்லை; ''கொள்கையை மீறிய தலைவர் கட்சியை விட்டுச் செல்லட்டும்: நாம் புதுத் தலைவரின் கீழ் அணி வகுப்போம்'' என்பதுதான் அவர்கள் ஒரே கோரிக்கை. நிர்வாகக் குழுத் தலைவர் வேதாசலம் அவர்கள் கமிட்டியைக் கூட்டி முடிவு காண்பதுதான் இந்நிலையில் மேற்கொள்ள வேண்டிய ஒரேவழி; அவர் கூட்டாவிட்டாலும் எப்படியோ கமிட்டி கூடியாக வேண்டும். சிதறுண்டு கிடக்கும் திராவிடர்களுக்கு நல்வழி காட்டும் புது முடிவு அங்கே நிறைவேற்றப்படவேண்டும். திராவிடர் கழகம் உயரிய இலட்சியங்களைக் கொண்டது; நாட்டு மக்களுக்கு உரிமை தேடித்தருவது என்று

(9-ம் பக்கம் பார்க்க)

# இன்னமுமா விளக்கம் தேவை?

**"தங்கள் பகுத்தறிவுக்குச் சிறிது சுதந்தரம் வேண்டுமென்பவர்களுக்கும் எனது இயக்கத்தில் இடமில்லை. நான் சொல்வதை ஏற்று நடப்பவர்களுக்கே இங்கு இடமுண்டு."**

ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள், அவர் தொடங்கவிருக்கும் இந்துமத புனருத்தாரண இயக்கத்தில் சேர விரும்புவோருக்குத் தந்துள்ள அறிவிப்பு இது என்று யாராவது சொன்னால் நமக்கு ஆச்சர்யம் பிறக்காது! ஜகத்குரு அப்படித்தான் கூறுவார்! அது இயற்கை!

நெருப்பு சுடும் என்று யாராவது கூறினால், "ஏனையா இதுபோல சுடு சொல் கூறுகிறீர், நியாயமா இது?" என்று யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். நெருப்பு சுடத்தானே செய்யும், எவருக்கும் தெரிந்த உண்மைதானே இது, இதனைக் கூறுவதிலே தப்பென்ன இருக்கிறது, என்றுதான் எவரும் கருதுவார்கள்.

எட்டிக்காய் கசக்கிறது என்று, எட்டியை, எட்டியென்பது தெரியாமல் சுவைத்துவிட்டவன் கூறினால், சீச்சீ! நீ என்ன இப்படிக் கசப்பான வார்த்தைகளைப் பேசுகிறாயே என்று கூறமாட்டோம்! நியாயந்தானே அவன் கூறுவது என்றுதான் நாமும் கூடச் சேர்ந்து எட்டிக்காய் மீது சீறிவிழுந்து பேசுவோம்!

நெருப்பு சுடுகிறது என்றும், எட்டி கசக்கிறது என்றும் கூறுகிறபோது மட்டுமல்ல, வெயில் காய்கிறது என்றோ, கருநாகம் சீறுகிறது என்றோ, கர்த்தபம் கதறுகிறது என்றோ, குக்கல் குலைக்கிறது என்றோ, புழு நெளிகிறது என்றோ எவராவது கூறிடும்போதும் நமக்கு சீற்றமோ எரிச்சலோ தோன்றுவதில்லை. காரணம், கருநாகம் சீறுவதும் கடும்வெயில் காய்வதும் கர்த்தபம் கதறுவதும் குக்கல் குலைப்பதும் புழு நெளிவதும் இயற்கை. எனவேதான் சீறுதல், காய்தல், கதறுதல், குலைத்தல், நெளிதல் முதலான செயல்கள் நமக்குப் பிடித்தமில்லாதன நம்மால் வெறுக்கப்படுவன என்ற போதிலும், அவை, அவற்றின் இயற்கையான இடத்திலிருந்து பிறக்கின்றன என்ற காரணத்தினால், அந்த உண்மைகளைக் காதால் கேட்கும்போது நமக்குக் கோபம் பிறப்பதில்லை. ஆமாமாம், அதெல்லாம் இயற்கைதானே, அதை ஏனப்பா இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறாய், வேறு வேலையில்லையா உனக்கு என்றுதான் கேட்கத் தோன்றும்.

இவையே போலத்தான், சங்கராச்சாரியார், அவர் தொடங்கவிருக்கும் இந்துமத வளர்ப்பு இயக்கத்தில் தாமாகச் சிந்தித்து நல்லதோர் முடிவுக்கு வரக்கூடியவர்களுக்குச் சிறிதும் இடமில்லை, அப்படிப்பட்டவர்கள் இயக்கத்தில் சேரவேண்டாம் என்று கூறுகிறபோதும் நமக்குக் கோபம் பிறக்காது. ஏனெனில் அவரோ சங்கராச்சாரியார்! அவர் தொடங்கவிருக்கும் பணியிலே பகுத்தறிவுக்கு, இடம், எப்படி இருக்க முடியும்? முடியும் என்று யார் எதிர்பார்க்க முடியும்? எதிர்பார்த்தால், அது எப்படிச் சரியாகும்?

இந்துமதம் என்பதே, பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பகுத்தறிவுக்கு நேர் முரணான, பகுத்தறிவுப் பகலவனைக் கண்டதுமே கரைந்துபோகக்கூடிய மூடநம்பிக்கை என்னும் மூடுபனியால் நிரப்பப்பட்டுள்ள ஓர் உளுத்துப்போன கட்டிடம்! அந்தக் கட்டிடத்தை அழகுபடுத்த முன்வருகிறார் ஜகத்குரு ஸ்வாமிகள் என்றால் அவரிடத்திலே நாம் எப்படி பகுத்தறிவு வாதிகளுக்குப் பரிவும் பாசமும் எதிர்பார்க்க முடியும்?

எனவேதான் சங்கராச்சாரியார், பகுத்தறிவுவாதிகளுக்கு என் இயக்கத்தில் இடமில்லை என்று கூறினால் அது யாருக்கும் வியப்பையோ திகைப்பையோ தராது. இது சகஜம் என்ற வாசகத்தைத்தான் எவரிடமிருந்தும் பெறமுடியும் சங்கராச்சாரியார் செப்பக்கூடிய இந்தக் கூற்று!

ஆனால், இப்போது, இந்த வாசகத்தைக்கூறி இருப்பவர் சங்கராச்சாரியார் அல்ல! பெரியார் இராமசாமி! பகுத்தறிவுத் தந்தை!! எனவே தான் "விடுதலை"யில் கண்டதும், நமக்கு நம்மையே நாம் நம்பமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. நாம் காண்பது விடுதலை ஏடுதானா, அதில் வந்திருப்பது பெரியாரின் வாசகம்தானா, அதனைத் தீட்டியிருப்பவர் உண்மையிலேயே பெரியார்தானா, நாம் இதனைப் படிப்பதும், அந்த ஏட்டிலே இந்த வாசகம் வந்திருப்பதும், அதைக்கண்டு நாம் திகைப்பதும் எல்லாம் மெய்யாகவேதான் நடைபெறுகிறதா அல்லது எல்லாம் வெறும் கனவா என்ற ஐயம் ஏற்பட்டது நமக்கு "விடுதலை"யில் பெரியார் அவர்கள் எழுதியுள்ள இந்த வாசகத்தைக் கண்டதும்!

பெரியார், பகுத்தறிவுத் தந்தை! சிந்திக்கத் தெரியாதவன் கோழை என்ற வாசகத்தை திக்கெட்டும் முழக்கிய மாவீரர்! வேதமானால் என்ன, மூவரும் தேவரும் நேரிலே வந்து மொழிந்ததானால் தான் என்ன, உங்கள் பகுத்தறிவு என்னும் தராசில் வைத்து நிறுத்துப் பாருங்கள் அந்த உரைகளை! உங்கள் பகுத்தறிவு அந்த வேத மொழிகளை ஒப்பவில்லையேல் எடுத்து வீசுங்கள் அவற்றை குப்பையில் என்று அஞ்சாத நெஞ்சுடன் வீர உரை ஆற்றிய வெண்தாடி வேந்தர்! நம்முடைய பழக்க வழக்கங்களை, சடங்குகளை, சாஸ்திரங்களை, முன்னோரின் மொழிகளை, வழிகளை, புனித நூல்களை, பூசுரர் வாதங்களை, ரிஷிகள் முனிவர்கள் தவசிரேஷ்டர்கள் அருள் மொழிகளை, அனைத்தையும் பகுத்தறிவுச் சல்லடையால் சலித்துச் சலித்து அவற்றின் பொய்ம்மையை, புட்டுப் புட்டுக் காட்டிய சீர்திருத்தச் சிங்கஏறு! ஆம்! அவர்தான் கூறுகிறார் இதுபோது தங்கள் பகுத்தறிவுக்குச் சிறிது சுதந்தரம் வேண்டும் என்பவர்களுக்கும் எனது இயக்கத்தில் இடமில்லை என்று!

பகுத்தறிவுத் தந்தை பகுத்தறிவை எள்ளி நகையாடுகிறார்!

சிந்தனைச் சிற்பி, சிந்தனைக்கு என் இயக்கத்தில் இடம் தரமாட்டேன் என்று கூறுகிறார்!

சங்கராச்சாரியார் இதே போலத்தான் பேசுகிறார், "இந்து மதம் முன்னோர் அறிவின் திரட்டு! அதிலே சிந்தனைக்கு இடமில்லை" என்று கூறுகிறார். இதோ பெரியார் கூறுகிறாரே என் இயக்கத்தில் பகுத்தறிவுக்கு இடம்தர மாட்டேன் என்று, இதற்கும் அந்த சங்கரர் வாதத்திற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

(10-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருவாரியான ஆதரவு அவருக்குக் கிடைத்தால் தலைவராவது தான் ஜனநாயகமுறை.

என்ன காரணத்தாலோ, பெரியார், திருமணத்தையும் நிறுத்தவில்லை. கட்சியைவிட்டும் விலகவில்லை. அவராக விலகுவதற்காக நாமாக அளித்த ஒரு மாதகால இடைவெளியையும் அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இனியும் நாம், அவராக விலகுவார்—நாமாக அவரை விலக்குவது மரியாதைக் குறைவு என்று எண்ணிக்கொண்டு இருந்தோமானால், அதிலே சிறிதும் அர்த்தமில்லை, அவராக விலகமாட்டார். அந்த அளவுக்கு கண்ணியத்தை அவரிடம் நாம் எதிர்பார்க்கக்கூடிய நிலையில் அவர் இருந்திருப்பாரானால் ஒருபோதும் இத்தனை ஆயிரம் பேருடைய கண்ணீர்த் துளிகளை விஷமிகளின் பிரசாரம் என்றும், சுயநலமிகளின் கூக்குரல் என்றும், சதிகாரர்களின் துர்நடத்தை என்றும் கேலி செய்திருக்கமாட்டார்.

உடுமலை வழக்கு முடியட்டும்—ஒருக்கால் அவர் அந்த வழக்கில் தண்டிக்கப்பட்டு ஒன்று அல்லது இரண்டு மாதகாலம் சிறைப்படுத்தப்பட்டுவிட்டால், அந்த நேரத்தில் நாம் அவருடைய தலைமையை மாற்றுவது கண்ணியமான முறை அல்ல என்று நாம் இதுவரை கருதி வந்தோம், இனி அந்தக் காரணத்தைக் கருதி நாம் வாளா இருக்கவும் தேவையில்லை—வழக்கு முடிந்து, பெரியார் விடுதலையும் ஆகிவிட்டார்.

இதுவரையில் நாம் தாமதிக்க வேண்டியது நியாயம், முறை. ஆனால், இனி, நாம் ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது, உடனடியாகத் தலைமைப் பதவியை பெரியாரிடமிருந்து மாற்றியாக வேண்டும்.

இனி, நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும், கட்சியின் நலத்திற்குத் தீமையையே விளைவிக்கும். இப்போது மிக விரைந்து பணியாற்ற வேண்டியது நமது கடமை மட்டுமல்ல உரிமையும் ஆகும்.

பெரியார், மேலும் மேலும் நம்மைத் தூற்றிக்கொண்டுதான் இருப்பார். புதிய புதிய அற்புத அதிசய கோணல் திட்டங்களை வகுத்து வகுத்து, நம்மீது ஏதேனும் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை, வேளைக்கொரு விதமாகவும், நாளுக்கொரு முறையாகவும், சுமத்தியபடிதான் இருப்பார். அவற்றிற்கெல்லாம் இதுவரை, இந்த வாரம் வரை, நாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியது நிலைமையைத் தெளிவுபடுத்தவேண்டிய நம் கடமையின் ஒரு பகுதிப் பணியாக இருந்து வந்தது என்பது மெய்தான். ஆனால் இனி, அந்தப் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் வேலை அல்ல நமக்கிருப்பது. உடனே தலைமையை மாற்றிவிட்டு, கட்சியை சரியான அமைப்பு முறையில் திட்டவட்டமான கிளை உறுப்புக்களுடன் தெளிவான போக்கில் விஞ்ஞான ரீதியில் மாற்றி அமைத்து மறுகோலம் செய்துவிட்டு, கட்சித் திட்டங்களையும் செயல் முறைகளையும் கொள்கை விளக்கங்களையும் சீர்திருத்தி செம்மைப்படுத்தி ஒரு தெளிவுக்கும் ஒழுங்குமுறைக்கும் உள்ளானதாக ஆக்கிவிட்டு, கட்சிப் பணியை விட்ட இடத்திலிருந்து தொடங்கி, முன்னிலும் பல மடங்கு வேகத்துடன், முன்னிலும் பல மடங்கு தெளிவுடன், முன்னிலும் பல மடங்கு உற்சாகத்துடன் இயக்கத்தை நடத்திச் செல்ல வேண்டியது நம் கடமை.

ஏற்கெனவே, இரண்டு மாத காலத்தை நாம் இழந்தாகி விட்டது, வேகவேகமாக நடந்து வந்த கட்சி பெரியாரின் விபரீதச் செயல் காரணமாக, இந்த இரண்டு மாதமாக, செயலற்று நிற்கிறது. ஓய்வு ஒழிவு இன்றிப் பணியாற்றி வந்த நம் தோழர்கள், இப்போதுள்ள இந்த செயலற்ற நிலையைச் சிறிதும் விரும்புகிறார்களில்லை. மீண்டும் கழக சக்கரம் உருளவேண்டும். மறுபடியும் இயக்க மின்சாரம் நாடெங்கும் பாயவேண்டும். **திராவிடர் இயக்கம் எனும் மின்சார சக்தி இல்லையேல் நாட்டுக்குப் புது ஒளி கிடையாது, நாட்டு மக்களுக்குப் புதுவாழ்வு கிடையாது.** எனவே, நாடு, கழகம் என்றைக்கு மீண்டும் பணி புரியும்—என்றைக்கு என்றைக்கு என்றுதான் மிக மிக ஆவலுடன் கேட்டபடி இருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரும் திராவிடர் கழகம் என்னும் இந்தக் கதிரவன் திருமண கிரகணத்தினின்று நீங்கி நாட்டுக்கு நல்லொளி வழங்கும் நல்லதோர் நாளுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கட்சிகள் பல உண்டு தமிழகத்தில். ஆனால் திராவிடர் கழகத்தைப் போல மக்கள் உள்ளத்தைத் தன் தனி உடைமையாக்கிக் கொண்ட கட்சி வேறு கிடையாது. எனவேதான் திராவிடர் கழகம் இந்தச் சில வாரங்களாக தங்களை வந்து கண்டு பேசி மகிழ்ந்து செல்லாதது கண்டு வாடிய தாமரையென பொலிவிழந்திருக்கின்றது மக்கள் நெஞ்சம். எனவேதான் இனி நாம் சிறிதும் தாமதிக்கக் கூடாது, உடனடியாக தலைமைப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து சரிசெய்துவிட்டு, பெரியாருக்கு ஓய்வு தந்து வேறு தக்க தலைவரைத் தேர்ந்துவிட்டு, கட்சிப் பணியிலே மும்முரமாக ஈடுபட்டுவிட வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

வேறு தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக உடனே நிர்வாகக் கமிட்டியைக் கூட்டவேண்டியது நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் டி. பி. வேதாசலத்தின் கடமை என்று நாம் இரண்டு வார காலத்திற்கு முன்பே தெளிவாக எழுதி இருந்தோம். நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களாகிய தோழர்கள் ஏ, வி. பி. ஆசைத்தம்பி, நீதிமாணிக்கம் ஆகியோரும், கமிட்டியை உடனே கூட்டவேண்டும் என்பதை நன்றாக வலியுறுத்தி தோழர் டி. பி. வேதாசலம் அவர்களுக்கு 20-7-49 ல் கடிதம் எழுதி இருந்தனர். கட்சியில் இன்றுள்ள கொந்தளிப்பை நன்கு அறிந்தவராகிய தோழர் வேதாசலம் யார் வேண்டுகோள் அனுப்பி யிருந்தாலும், யார் வேண்டுகோள் அனுப்பாமல் இருந்தாலும், கமிட்டியைத் தாமாகவே கூட்டியிருக்க வேண்டியது அவருடைய கடமை. கடைசி முறையாக நிர்வாகக் கமிட்டி கூடியபோது, வந்திருந்த 31பேரில் **ஒருவர் நீங்கலாக மற்ற அத்தனை பேரும்,** கட்சி நலனை முன்னிட்டு, பெரியார், திருமணத்தைக் கைவிட்டுவிட வேண்டுகிறோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கின்றனர். தோழர் வேதாசலமும் இந்தத் தீர்மானத்திற்கு ஓட்டுக் கொடுத்த பிரமுகர்களில் ஒருவர் தான். **எனவே இந்தத் திருமணம் கட்சி நலனுக்கு கேடு விளைப்பது என்னும் கருத்தை வேதாசலமும் ஒப்புக் கொண்டார் என்றுதான் அர்த்தம்.** இந்தத் தீர்மானம் பயனற்றுப் போகும் விதமாக, பெரியார், இந்தக் கமிட்டி இந்தத் திருமணத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காகவே கூடுகிறது என்பதை நன்றாகத் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே

(8-ம் பக்கம் பார்க்க)

# நன்றா ஆனால் ஒன்று!

சென்னை ஆட்சியாளர்களே! உங்களைப் பாராட்டுகிறோம்! மனமாரப் பாராட்டுகிறோம்! மெய்யாகவே பாராட்டுகிறோம்!

நீங்கள் நாட்டுநலத்திற்கான நற்செயல் புரிந்திடும் நேரத்தில் எல்லாம் நாங்கள் உங்களைப் பாராட்டத் தவறியதில்லை. மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவந்தீர்கள் — மனமாரப் பாராட்டினோம். திருக்குறள் இனி கட்டாய பாடம் என்றீர்கள்—நன்று மிக நன்று என்று நன்மொழி நவின்றோம். கோயில் மட, சீர்திருத்த மசோதா கொண்டுவந்தீர்கள் — நாடெங்கும் ஆதரவைத் திரட்டித் தந்தோம். ஜமீன் ஒழிப்பு மசோதா கொண்டுவந்தீர்கள் — உங்கள் கட்சிக்காரர்கள் அதனைத் தூற்றினர் என்ற போதிலும் நாங்கள் அதனை முற்றிலும் ஆதரித்து மக்கள் மன்றத்தில் அந்தத் திட்டத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திப் பேசி அரும்பணி புரிந்தோம். அதுபோலவேதான் இப்போதும் உங்களைப் பாராட்டவேண்டிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது — எனவே பாராட்டுகிறோம்! உண்மையாகவேதான் பாராட்டுகிறோம்!

நீங்கள், இந்தக் கிழமை புரிந்துள்ள ஒரு பணி, நாட்டு நலனில் நாட்டம் உடையார் அனைவராலும் ஏற்றுப் போற்றுதற்குரியதோர் பணியென்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

ஆமாம், உடுமலைப்பேட்டை வழக்கை வாபீஸ் வாங்கிக் கொண்டீர்களே, அதற்காகத்தான் உங்களைப் பாராட்டுகிறோம். பாராட்டுவதுதானே நியாயம்! பாராட்டாமல் எப்படி இருக்கமுடியும்?

உடுமலைப்பேட்டையிலும் சரி, நீங்கள் 144 தடை உத்தரவுகளை வீசி, மக்கள்தம் பேச்சு உரிமையைப் பறிப்பது, ஒரு ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளும் உங்களுக்கு ஏற்றது அல்ல என்று பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

மக்கள் ஆட்சியில், மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் சர்க்காரை அமைத்து நடத்துபவர்கள், மக்கள் நலனுக்கு மாறான செயல் ஏதேனும் புரிந்திடும்போது, அவர்கள் செயலைத் திருத்துவதற்கும் அவர்களுக்கு ஆய்வுரை வழங்குவதற்கும் மக்களுக்குள்ள ஒரே ஒரு வழி பொதுக்கூட்டங்கள் அமைத்து தங்கள் தங்கள் குறைபாடுகளை ஆட்சியாளர்களுக்கு அறிவிப்பதுதான்.

அமைதியாகக் கூட்டம் கூடும் உரிமையும், தங்கள் உள்ளக்கருத்தை ஊராள்வோருக்கு அஞ்சாமல் தெள்ளத் தெளிய எடுத்துச்சொல்லும் உரிமையும், ஒரு ஜனநாயக ஆட்சியில், மக்களுக்கு நிச்சயம் இருந்தாக வேண்டிய குறைந்த அளவு உரிமைகளாகும். இந்த அடிப்படை உரிமைகளைக் கூட எந்த ஆட்சியாளரேனும் வேரோடு கல்லியெறிய முனைவார்களாயின். அந்த ஆட்சியாளர்கள் ஜனநாயக ஆட்சியாளர்கள் ஆகமாட்டார்கள். இது ஜனநாயகக் கலையின் பாலபாடம். இந்தப் பாலபாடத்தை நீங்கள், இந்த மாகாணத்து ஆட்சியாளர்கள், வேறு எத்தனையோ பெரிய பெரிய சிக்கலான பிரச்சினைகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் மறந்துவிட்டபோது, நாங்கள் பணிவுடன் உங்களுக்கு நினைப்பூட்டியிருக்கிறோம்.

144 அதிகமாக ஆக ஓர் ஆட்சியிலே ஜனநாயகம் குறைகிறது என்று பொருள். இதனை உங்களுக்குப் பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

என்றாலும் எங்கள் அன்புச் சொல்லை ஏற்க மறுத்துவிட்டது உங்கள் உள்ளம்—அன்று!

எனவேதான் உடுமலை முதலிய பல இடங்களில் 144 உத்தரவை விதித்து, மக்கள் உரிமைகளைப் பறித்து, ஜனநாயகத் தத்துவத்திற்கு கல்லறை எழுப்பி, நீங்கள் தவறான பாதையில் சென்றபோது, நீங்கள் போகும் பாதை தவறானது என்பதை உங்களுக்குத் தெளிவான முறையில் தெரிவிப்பதற்காக உடுமலைப்பேட்டையில் 144 உத்தரவை மீறி பொதுக்கூட்டம் நடத்தினோம்.

அப்படி நடத்தியதற்காக பெரியார் ஈ. வெ. ரா, மாகாண திராவிட மாணவர் கழகத் தலைவர் மதியழகன், உடுமலை நண்பர்கள் தங்கவேலு, நாராயணன், நால்வர்மீதும் வழக்குத் தொடுத்தீர்கள்.

மக்கள்உரிமைக்காகப்போராடிய மக்களின் தலைவர்கள்மீது, அவர்கள், உரிமைக்குப் போராடியதையே குற்றமாகக்கொண்டு வழக்குத் தொடர்வது, அநீதி அநீதி என்பதை அன்றே எடுத்துச் சொன்னோம். கேட்கமறுத்தீர்கள்.

ஆனால் ஏறத்தாழ மூன்று மாத காலத்திற்குப் பின்னால், இந்தவாரம், இவர்கள் நால்வர் மீதும் நடந்துவந்த வழக்கை நிபந்தனையின்றி வாபீஸ் வாங்கிக் கொண்டீர்கள். தங்களின் இச்செயல் கண்டு மிகமிகமகிழ்கிறோம். இவ்வளவு காலத்திற்கு பிறகாவது ஜனநாயக உரிமைகளை மதிக்கவேண்டியது அவசியம் என்பதையும், இவர்களைக் கைது செய்தது தவறு என்பதையும் உணர்ந்தமை கண்டு

(9-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 23
6—8—49 சனிக்கிழமை

## தலைமைப் பதவியை மாற்றுவோம்! கட்சிப் பணியைத் தொடங்குவோம்!

தென்னாட்டிலேயே, திராவிடர் கழகத்தைப்போல, வேகமாகவும் விறுவிறுப்பாகவும் பணியாற்றும் கட்சி வேறு கிடையாது என்று எல்லோரும் கூறி வந்தனர்.

ஓயாத உழைப்பு — சலியாத தொண்டு—இடையீடுஅற்ற பெரும் பணி—அலுப்பே அறியாமல் காரியமாற்றும் உள்ள உரம் ஆகிய நற்பண்புகளுக்கு நல்லதோர் உதாரணம் தேவை என்ற போதெல்லாம், நாடு, நம் கழகத்தையே சுட்டிக்காட்டி வந்தது.

வேளை நேரம் என்பது இல்லாமல், இரவு பகல் என்பது இல்லாமல், ஓய்வு ஒழிவு என்பது தெரியாமல், வேறு சிந்தனை—வேறுகாரியம் என்பதையே நினையாமல் இவர்களைப் போல கட்சிப் பணியாற்ற யாரால் முடியும் என்று, மாற்றுக் கட்சியினரும், தமக்குள்ளே, இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

"அடடா! கட்சி என்றால் இது அல்லவா கட்சி! இது அல்லவா இயக்கம்! இது அல்லவா மக்கட் பணி புரியும் மன்றம்! இது அல்லவா பிரசார ஸ்தாபனம்! இந்தக் கட்சியால் அல்லவா நினைத்ததைச் சாதிக்கமுடியும்" என்று, கடை வீதியில், கல்லூரி மாடியில், சிற்றுண்டிச்சாலையில், டிராம்—பஸ்—ரயில் வண்டிகளில், மக்கள், ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, கூறிக்கொள்வது வாடிக்கையாக இருந்து வந்தது.

"போன ஞாயிற்றுக்கிழமை தானப்பா இந்த ஐலண்டு மைதானத்தில் இவர்கள் கூட்டம் போட்டார்கள். போட்டு மூன்று நாள் ஆகவில்லை! அதற்குள்ளே, இன்று மற்றொரு கூட்டம் போட்டுவிட்டார்கள். அப்பப்பா! இவர்கள் குரலுக்கு என்ன ஓய்வே கிடையாதா?" என்று, நம் கூட்டங்கள் நிகழும் போதெல்லாம், அந்த வழியாகச் செல்வோர், பெரு வியப்புடன் கூறுவர் என்பது எவருக்கும் தெரிந்த செய்தியேதான்.

"அவர்கள் கொள்கைகள் சரியோ தப்போ, அவர்கள் இலட்சியங்களை நாம் ஒப்புக்கொள்கிறோமோ இல்லையோ—அது வேறு சங்கதி—ஆனால் அவர்கள் உழைப்பு! அதை மட்டும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது."—இந்த வாசகம், முன்பெல்லாம், மக்கள் மன்றத்தில் எழாத நாள் இருந்ததே கிடையாது!

திராவிடர் கழகம் என்றால் ஓயாத உழைப்பு! ஓயாத உழைப்பு என்றால் திராவிடர் கழகம்! என்றே தென்னாட்டு அரசியல் அகராதி சென்ற மாதம் வரையில் பொருள் கூறி வந்தது.

இந்த வாரம் பொதுக்கூட்டம்—அடுத்த வாரம் மாநாடு—அதற்கடுத்த வாரம் திராவிட நாடு பிரிவினை நாள்—இடையே ஒரு நாள் திருக்குறள் சொற்பொழிவு—அதனை ஒட்டி ஒரு சொற்பயிற்சிக் கூட்டம்—பிறகோ, மேதின விழா! அதற்கு அப்புறமோ திராவிட மாணவர் சுற்றுப் பயணம் என்று இப்படித்தான் வரிசை வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக, ஓய்வோ சாய்வோ சிறிதுமின்றி, கழக வேலைகள், மடமடவென நடந்தபடி இருக்கும்.

கழகத்தைக் கண்டாலே கழகத்தின் பணியைக் கண்டாலே, பணியின் வேகத்தைக் கண்டாலே, வேகத்தின் நல்விளைவைக் கண்டாலே வேற்றுக் கட்சியினர் வியப்பும் திகைப்பும் ஒருங்கே அடைவர்—அந்த அளவுக்கு, கழகம், விறுவிறுவென வளர்ந்தோங்கி வந்தது—பணி, கபகபவென நடந்தபடி இருந்தது—கூட்டங்கள் மட மடவென கூடியபடி இருந்தன—பிரசாரம், வேக வேகமாகச் செய்யப்பட்டபடி இருந்தது—எதிர்ப்பும் மளமளவென முறிந்து வீழ்ந்தபடி இருந்தது.

பணி! பணி! பணி! என்று இயக்கப் பணியிலே பித்துப் பிடித்தலைந்தனர், கழகத்தோழர்கள்! தொண்டு தொண்டு! தொண்டு! என்று கட்சித் தொண்டிலேயே இரண்டறக் கலந்து நின்று செயல் புரிந்தனர் எஃகு உள்ளம் படைத்த நம் வீர இளைஞர்கள். பிரசாரம் பிரசாரம் பிரசாரம் என்று திக்கெட்டும் சென்று, எதிரிகளின் வாதங்களைத் தவிடுபொடியாக்கினர் வாளினும் வன்மை மிக்க சொல் வன்மை வாய்ந்த நம் சொல்லின் செல்வர்கள்! நாடெங்கும் செல்வோம் நற்பணி புரிவோம் என்று முத்தமிழ் முரசினை முழக்கியவண்ணம் பட்டி தொட்டிகளிலும் சென்று கட்சியின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டனர் மாணவ மணிகள்!

எழுதும் எழுத்து ஒவ்வொன்றையும் மாற்றாரின் படைவரிசை ஒவ்வொன்றை அழித்தொழிக்கும் கூர் அம்பாக வைத்து எழுதி வந்தனர் எழுத்தாளர்கள். பேசும் பேச்சு ஒவ்வொன்றையும் பகைவர் பாசறைகளைத் தூள் தூளாகச் சிதறியோடி சின்ன பின்னமாகும்படி செய்திடும் வெடிகுண்டு எனப் பேசி வந்தனர் பேச்சாளர்கள். செய்யும் தொண்டு ஒவ்வொன்றையும், நமக்குப் புதுப்புது பட்டாளங்களைச் சேர்த்துத் தரும் ஒவ்வொரு "ரெக்ரூட்மெண்ட்" போல வே அரிய முறையில் ஆற்றிவந்தன நம் அருமைத் தோழர்கள்.

ஆம்! திராவிடர் கழகம் ஆ[illegible] வாரங்கட்குமுன் வரையில் தந்து வந்த இனிய காட்சி இது!

ஆனால், இன்று?

கழகம் செயலற்றுக் கிடக்கிறது கட்சிப் பணி எதுவும் நடைபெறவில்லை!

கூட்டங்கள் கூடுவதில்லை,

சொற் பொழிவுகள் நிகழ்வதில்லை.

பிரசாரம் நடைபெறவில்லை.

மாநாடுகள் தோன்றவில்லை.

உறுப்பினர்கள் சேர்க்கும் பணி நடைபெறவில்லை.

இந்தி எதிர்ப்புப் போர் நின்று போய் இருக்கிறது.

"நடக்க இருப்பவை" "நடந்தவை", "கழகச் செய்திகள்", "விடுதலை"யில் நாள்தோறும் பக்கம்பக்கமாக வெளிவந்துக்கொண்டிருந்த இந்தப் பகுதிகள் யாவு

இதுபோது, தினம் தினம் காலியாக இருக்கின்றன.

எங்கும், எந்த மூலையிலும், கழகப் பணி எதுவும நடைபெறவில்லை.

• சுழல் சுற்றுப் பிரயாணங்கள் இல்லை—சூறாவளிப் பிரசாரம் இல்லை—பேச்சாளர்களின் பவனிகள் இல்லை—தொண்டர்களின் உற்சாகம் மிக்க உழைப்பும் இல்லை.

பிரம்மாண்டமானதோர் ஆலமரம், காற்று ஒரு துளியும் வீசாத நேரத்தில் எப்படி அசைவற்று நிற்குமோ, அப்படித்தான் இருக்கிறது கழகம்.

ஓயாமல் அலைகளை வீசிக்கொண்டேயிருக்கும் கடல் திடீரென அசைவற்று, அலைகளற்று, அலை ஓசை அற்று, அமைதியாக இருந்தால் எப்படி இருக்குமோ—மேடைமீது ஏறி நின்று, வெண்கல நாத சங்கீதக் குரலாலே, மலைவீழ் அருவி போல, மடமடவென பேசிக் கொண்டே இருக்கும் ஒப்பற்ற ஓர் பேச்சாளர் திடீரென பேச்சை இடையிலே நிறுத்திவிட்டு சட்டென்று வாய்மூடி மௌனியாக இருக்கத் தொடங்கினால் எப்படி இருக்குமோ—ஓடிக் கொண்டே இருக்கும் பெரியதோர் இயந்திரம் தடாலென நின்றுவிட்டால் எப்படி இருக்குமோ, அப்படித்தான் இருக்கிறது திராவிடர் கழகம் இன்று.

கழகத்திலே, ஒரு சிறு அசைவு, ஒரு துளி பிரசாரம், ஒரு கடுகளவு பணிகூட நடைபெறுவதில்லை இந்நாள்!

ஓடிக்கொண்டேயிருந்த கப்பல் பயணத்தை நிறுத்தியிருக்கிறது. பாடிக்கொண்டேயிருந்த குயில், மனவேதனை காரணமாக பாட்டை நிறுத்திவிட்டிருக்கிறது. இன்னிசை நாதத்தை கேட்பவர்தம் உள்ளத்தையெல்லாம் அள்ளிக்கொள்ளும் விதத்தில் எழுப்பிக் கொண்டேயிருந்த யாழின் நரம்புகள் அசைவற்று, இசையற்று, அமைதியாக இருக்கின்றன.

கழகம் பணி புரியவில்லை. பணி புரியவேண்டியவர்கள்-பணிபுரிந்து வந்தவர்கள்—இனியும் பணிபுரிய இருப்பவர்கள்—அவர்கள், தொண்டர்கள், உழைப்பாளர்கள், பணியாற்றாமல் இருக்கிறார்கள். எனவேதான் பணி நிகழவில்லை,

யாழில் இன்னிசையை எழுப்புவோனின் உள்ளம் அதாவது கட்சியில் தொண்டு புரிவோரின் நெஞ்சம், தலைவரின் தகாச் செயல் என்னும் ஈட்டிமுனையாலே குத்தப்பட்டு, அவருடைய பழிச்சொற்கள் என்னும் நச்சுத்தூள் வேறு தூவப்பட்டு, வேதனை என்னும் கருந்தேளால் கொட்டப்பட்டு, செய்வதறியாது திகைத்தபடி, துக்கபுரியில் உலவியபடி, சிந்தனாலோகத்தில் சஞ்சரித்தபடி இருக்கிறது. எனவேதான் அவன் கைவிரல்கள் யாழின் நரம்புகளைத் தடவவில்லை. எனவேதான் கட்சிப்பணி என்னும் இன்பத் தமிழிசையும் யாழின் நரம்புகளிலிருந்து தெறித்து எழுந்து காற்றிலே மிதந்து வரும் கீதமாக நாட்டு மக்களின் செவிகளிலே, நெஞ்சிலே, சிந்தனையிலே, பாயவில்லை. வேதனை, உள்ளத்தை வாட்டி வாட்டி வதைக்கும் நேரத்தில் இசை எங்ஙனம் பிறக்கும்? பிறந்தால்தான் அந்த இசையிலே இனிமை, அழகு, உயிர்ப்பாற்றல் எங்ஙனம் தவழும்?

பெரியாரின் செயல் கண்டு உள்ளம் குமுறிக் கிடக்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் அனைவரும் அவருடைய தலைமையிலிருந்து கட்சி மாறும்வரை. மாற்றப்படும் வரை, கட்சிப் பணி புரிவதிலே அர்த்தமுமில்லை, அது அவசியமுமில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள்.

தன் தொண்டர்கள் அனைவரையும் துச்சமென ஒதுக்கித் தள்ளும் தலைவரின் கீழே வேலை செய்வது தங்கட்கு மட்டுமல்ல தங்கள் உயிரினும் உணர்வினும் மேலான கட்சிக்கே அவமானம் என்பதை அந்தத் தோழர்கள் நன்கறிந்தார்கள். எனவேதான், பெரியாரிடமிருந்து—கட்சியிலிருந்தல்ல, விலகிநிற்க முடிவுகட்டினார்கள்.

கெஞ்சிக் கேட்பது—பணிந்து வேண்டுவது—தாழ்மையாக விண்ணப்பிப்பது முதலிய முறைகளாலே நாம் நமது கண்ணீரையும் கண்டனத்தையும் தலைவருக்குக் காணிக்கையாகத் தந்தும், தலைவர் திருமண ஏற்பாட்டிலே உறுதியாக பிடிவாதமாக இருக்கிறார் என்பது தெரிந்ததும் கட்சித் தோழர்கள், திருமணத்தைவிட கட்சிக் கொள்கையே பெரிது என்று கருதுவாரானால், பெரியார், திருமணத்தைக் கைவிட்டு விடவேண்டும், இல்லை—கட்சிக் கொள்கைகளைவிட திருமணம்தான் பெரிது என்று கருதுவாரானால் கட்சியைவிட்டு விலகிச் சென்று கட்சிக் கொள்கைக்கு மாறான திருமணத்தைச் செய்து கொள்ளட்டும் என்று தெளிவாகத் தெரிவிக்கலானார்கள். ஆனால் பெரியாரோ, கட்சிக் கொள்கைகளுக்குப் புறம்பான திருமணத்தையும் செய்து கொண்டு, கட்சித் தலைவராகத் தொடர்ந்து இருக்கவும் முடிவுசெய்தார். இந்தப் போக்கு விபரீதமானதாகவும், இயக்கத் தோழர்களின் உள்ளத்தை—உள்ளக் கருத்தை நேரிடையாக அவமானப் படுத்தும் தன்மையதாகவும் இருந்தது. என்றாலும் இயக்க அன்பர்கள், இந்த அவமானத்தையும் பொறுத்துக்கொண்டு, பெரியாரே, தாமாக, தம் இச்சையாக, இயக்கத்தை விட்டு விலகுவதற்கு அவருக்கு நேரம் தருவதே முறை என்று கருதி, திருமணம் முடிந்த பிறகும் கூட, ஏறத்தாழ ஒரு மாத காலமாக மிகவும் பொறுமையாக, அமைதியாக, பெரியாரை விட்டு விலகிநிற்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துவிட்டு, வேறு எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபடாமல் இருந்திருக்கிறார்கள்.

இந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக, பெரியார், கண்ணியமாக, “கட்சியில் உள்ள எல்லோராலும் வெறுக்கப்படுகின்ற திருமண முறையை நான் கையாண்டு பலருடைய உள்ளத்தையும் புண்படுத்தி அனைவருடைய நம்பிக்கையையும் இழந்துவிட்ட காரணத்தால், கட்சித் தலைமையைவிட்டு விலகிவிடுகிறேன்” என்று, தாமாகவே அறிவித்திருந்தால் அது எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். அவருக்கும் அது எவ்வளவோ மதிப்பை, உயர்வை, நற்புகழைத் தந்திருக்கும். உண்மையாகவே அவர் செய்திருக்க வேண்டிய காரியம் அதுதான். ஒரு கட்சித் தலைவர், தன் கட்சி உறுப்பினர்களின் நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டார் என்று சொன்னால், வெளிப்படையாக கட்சித் தோழர்களில்கிட்டத்தட்ட அனைவரும் அவர் தலைமையை இனி ஏற்கமுடியாது என்று சொல்லும் கட்டம் வந்துவிட்டது என்றிகூறினால், அதற்குப் பிறகு, தன் செயல் சரியானதே என்று அவர் உண்மையில் நம்பினால்கூட, கட்சித் தலைமையை உடனே ராஜிநாமா செய்துவிட்டு, வேண்டுமானால், மீண்டும் தேர்தலுக்கு நின்று, கட்சி மக்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

# கே. கே. நீலமேகம் அறிக்கை

சென்னை மாகாண, திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் T. P. வேதாசலம் அவர்களுக்கு ஷை கழக உபதலைவன் K. K. நீலமேகம் எழுதிக்கொண்ட வேண்டுகோள்.

9—7—49 அன்று பெரியார் திருமணம் நடைபெற்றது குறித்து, கழகத்திலே ஏற்பட்டுவிட்ட மனக் கசப்பும் கொதிப்பும் தாங்கள் அறிந்ததே.

திருமணச் சேதி தெரியாத நிலையிலே 10—7—49 அன்று திருச்சி தென்னூரில் கூடிய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், வந்திருந்த 32 உறுப்பினர்களில் 31 பேர் திருமணம் கூடாது என்றும், இயக்க நலன் கருதித் திருமணத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென்றும், தீர்மானித்ததும் தாங்கள் அறிந்ததே.

நிர்வாகக் கமிட்டியின் இந்தத் தீர்மானம் வீணாக்கப்பட்டதுடன், பிறகு ஏற்பட்ட நிலைமைகள், கட்சிக்குள் மேலும் குழப்பத்தையும் கசப்பையும் மூட்டிவிட்டிருக்கிறது.

30 நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் தலைவரின் போக்கை வெறுத்து, இனி அவருடைய தலைமை கூடாது என்று, தங்கள் கருத்தை வெளியிட்டு விட்டனர்.

மேலும் பலர் இதே கருத்தை எனக்குக் கடிதமூலம் தெரிவித்து வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே இயக்க நலன் கருதி, உடனடியாக மாகாண ஸ்பெஷல் மாநாடு கூட்டி தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கழகப் பணியை நடத்திச் செல்வதே முறை.

இதற்கான செய்ய, தாங்கள் நிர்வாகக்கமிட்டியைக் கூட்டவேண்டுமென்றும், தாங்கள் கூட்டத் தவறினால், நானே கூட்டுவதாகவும் 22—7—49 விடுதலையில் நான் அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

ஆகவே, தாங்கள், ஒருவார காலத்துக்குள், நிர்வாகக் கமிட்டி கூட்டி, பெருவாரியான நிர்வாகக் கமிட்டி உறுப்பினர், கழக முக்கியஸ்தர்கள், பல கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் ஆகியோரின் நம்பிக்கையை இழந்துவிட்ட தலைவரின் கீழிருந்து இனி வேலை செய்ய முடியாததாகையால் ஸ்பெஷல் மகாநாடு கூட்டித் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும், என்று தீர்மானம் நிறைவேற்றக் கோருகிறேன்.

44 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியில், இந்தக் கருத்தை ஆதரிப்பவர்கள் 30 பேர் இருப்பதால் ஜனநாயக முறைப்படி தீர்மானம் நிறைவேற்றப்படுவதே நியாயம்.

தாங்கள் நிர்வாகக் கமிட்டியை ஒருவார காலத்தில் கூட்டாவிட்டால் நான் ஏற்கெனவே அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறபடி, நானே நிர்வாகக் கமிட்டியைக் கூட்டவேண்டி நேரிடும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4—8—49 **கே. கே. நீலமேகம்.**

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக்கமிட்டியை அவமானப்படுத்தும் தோரணையில், கமிட்டிக் கூட்டத்திற்கு முந்திய நாள் மாலை திருமணம் செய்துகொண்டார். கமிட்டியின் தீர்மானப்படியோ இந்தத் திருமணத்தால் கட்சிக்குப் பாதகம் நேரிடுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலையில் மீண்டும் கமிட்டியைக் கூட்டி, இந்தத் திருமணத்தால் நேரிட்ட பாதகத்தை எப்படிப் போக்குவது என்ற பிரச்சினையை விவாதத்திற்குக் கொண்டுவந்திருக்க வேண்டும் தோழர் வேதாசலம். பலர் எடுத்துக்காட்டியும் கூட, அவர், இந்தக் கடமையை ஆற்றத் தவறியது உண்மையில் பெருங்குற்றமே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**திராவிடர் கழகத் துணைத் தலைவர் K. K. நீலமேகம் அவர்கள்** வெளியிட்டுள்ள அறிக்கை வேறிடத்தில் வெளிவந்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துரைகளையும் திட்டத்தையும் நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம். அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, நிர்வாகத் தலைவர் வேதாசலனார் ஒருவார காலத்திற்குள்ளாக கமிட்டியைக் கூட்டத் தவறினால், துணைத்தலைவர் நீலமேகம் அவர்கள் கமிட்டியைக் கூட்டி, தலைமைப் பதவியைப் பற்றிய தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்குத் தேவையான வாய்ப்பை, கமிட்டி உறுப்பினர்களுக்குத் தர முன் வந்திருப்பது கண்டு நாம் பெரிதும் மகிழ்கிறோம்.

தலைமைப் பதவி மாற்றம் என்ற கட்டத்தை விரைவில் முடித்துவிட்டு, நிர்வாகக் குழுவினர், கட்சிப் பணியை மும்முரமாகத் தொடங்கவேண்டியது மிகவும் அவசரமும் அவசியமுமாகும் என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கூற ஆசைப் படுகிறோம் "தாமதம் கூடாது! தாமதம் கூடாது! இனி சிறிதும் தாமதம் கூடாது! கட்சிப் பணி நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது! நாடு, நம் பணியினை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது!" இதுதான் திராவிடக் கழக நிர்வாகக் கமிட்டியினருக்கு இந்த இரண்டு வயதுக் குழந்தை, "போர்வாள்", இந்த முக்கியமான நேரத்தில், பணிவுடன் தெரிவித்துக்கொள்ளும் வேண்டுகோள்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தவழ்ந்த பெருமகிழ்ச்சிமணல் வீடுபோல் சடசடவெனச் சரிந்து போயிற்று. பழையபடி துக்கமும் வெட்கமுமே நம் நெஞ்சத்தை அரிக்கலாயின.

அந்த அறிக்கை மட்டும் உண்மையானதாகவே இருந்திருந்தால், மெய்யாகவே பெரியார் தன் தவறை உணர்ந்து **அதைத் திருத்திக் கொள்ளவும்** முன் வந்திருந்தால், திருமண ஏற்பாட்டைரத்துசெய்து விட்டு, தான் செய்த தவறுக்கு வருத்தம் தெரிவிக்கவும் தயாராய் இருந்திருந்தால், எவ்வளவுநன்றாய் இருந்திருக்கும்! கட்சியிலே ஏற்பட்டுள்ள பிளவும் பேதமும் நீங்கி கட்சி, மடமடவெனப் பணியாற்றுவதற்கு எவ்வளவு சீக்கிரம் வழி ஏற்பட்டிருக்கும்!

பெரியார் தன் தவறை அறியத் தொடங்கிவிட்டார், மக்கள் உணர்ச்சியை மதிக்கத் தொடங்கி விட்டார்; ஜனநாயகப் பாதையினில் செல்வதே தன் கடமை என்பதை உணரத் தொடங்கிவிட்டார் என்பதை அறிந்து நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தோம்! அந்த மகிழ்ச்சி, கடைசியில், எவ்வளவு அற்ப ஆயுள் உடையதாய் ஆகிவிட்டது!

பெரியார், இப்போதும் ஜனநாயகப் பாதையில் நடக்க மறுக்கிறார்! இன்னமும், தன் செயலின் விபரீதத்தை உணர முடியாது என உரைக்கிறார்! இன்னமும் கூடதான் செய்துகொண்ட திருமணம் தவறல்ல என்றே வாதிக்கிறார்! இன்றுகூட, நம் கண்ணீரை, கண்டனத்தை, மனவேதனையைக் கேலி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

என்ன விபரீதம்!

எவ்வளவு வேதனை மிக்க நிலைமை!!

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டதனால்தான், வேறு பல கட்சிகளிலிருந்தும் நாம் அதில் சேர்ந்தோம். திராவிடர் கழகத்தின் உன்னத இலட்சியங்கள் நம்மைக் கவர்ந்தன; நாமும் திராவிடக் கழகத் தோழரானோம். இப்போது நம் இலட்சியத்திற்கு ஊனம்நேர்ந்திருக்கிறது நம் தலைவரே நம் குறிக்கோளைப் புறக்கணித்து விட்டார்; இந்நிலையில "மீண்டும் பணிபுரிய வாரீரே" என்று அழைப்பது எத்தனை பொருத்தமற்ற வாதம்! **குறிக்கோள் பெரிதென்று கருதுபவர்கள் குறிக்கோளைக் குப்பைக்குச் சமமாக மதித்து விட்ட தலைவரின்கீழ் மீண்டும் எப்படித் தொண்டாற்ற முடியும்?** குறிக்கோளை மனத்திற் கொள்ளாது, பெரியாரையே நம்பி வந்தவர்கள் வேண்டுமானால், நடந்ததை மறந்துவிடமுடியும்! நம்மால் முடியவே முடியாது! பழி துடைக்கப்படவேண்டும். **தலைவர்செய்த தவறு கட்சிக்குச் சேரக் கூடாது.** கட்சி முன்போல பணியாற்ற வேண்டுமென்று கருதுபவர்கள் புதுத் தலைமை வேண்டுமென்று கோருவதில் வியப்பில்லை! இக் கோரிக்கையை, விருப்பத்தை, தலைமைப் பதவியைப் பெறச் செய்யும் சூழ்ச்சி என்று புது வர்ணம் பூசித் தடுத்து விடலாமென்று எண்ணுவது பேதைமை! யார்தலைவர் என்பதல்ல எழுந்துள்ள பிரச்னை! தலைவர் தவறு செய்யலாமா என்பதே இன்று நாட்டிலே எழுந்துள்ள கேள்வி. இக் கேள்விக்குச் சரியான முறையில் பதிலளிக்கப்பட்டாக வேண்டும்,

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களை மிகவும் பாராட்டுகிறோம்.

ஆனால் ஒன்று. இவர்கள் நால்வரையும் நீங்கள் கைது செய்தது இவர்கள் 144 உத்தரவை மீறினார்கள் என்பதற்காக. இப்போது இவர்களை விடுதலைசெய்துவிட்டீர்கள்! எனவே உடுமலையில் 144 விதிக்கப்பட்டது சரியல்ல என்பதை நீங்கள் உணர்ந்துகொண்டு விட்டீர்கள் என்பதே இதற்குப் பொருள்.

உடுமலை போலவே வேறு பல ஊர்களிலும் 144 விதித்திருக்கிறீர்கள். அவற்றையும் நீங்கள் உடனே வாபீஸ் வாங்கிக்கொண்டால் எல்லாக் கட்சியினருடைய நன்மதிப்பும் உங்கட்குக் கிடைக்கும். பொதுமக்களும் உங்களுடைய நேர்மை உணர்ச்சியை நிச்சயம்பாராட்டுவார்கள்.

பல ஊர்களிலும் நீங்கள் விதித்துள்ள 144 உத்திரவுகளை வாபீஸ் பெறுவதோடு, இராவண காவியம்போன்ற, இலக்கியங்கள், இலட்சிய வரலாறு போன்ற அரசியல் நூல்கள், போர்வாள் முதலியநாடகங்கள் ஆகியவற்றின்மீது விதித்துள்ள தடைகளையும் பறிமுதல் ஆணைகளையும் எடுத்துவிடுங்கள்.

அப்படிச் செய்வீர்களானால் உண்மையில் உங்களைத் தென்னாட்டார் அனைவரும் சிறந்த ஆட்சியாளர்கள் என்று போற்றிப் புகழ்வது உறுதி

---


## சிறந்த புத்தகங்கள்

1. என்னை கவர்ந்த புத்தகங்கள் (C. N. அண்ணாதுரை) 0 1 6
2. என்கடன் களிப்பூட்டுதலே (N. S. கிருஷ்ணன்) 0 2 0

வியாபாரிகளுக்கு கழிவு 30-
தபால் செலவு இனாம்

**அசோக ஏஜன்ஸி,**
7. நமசிவாய முதலி தெரு,
வண்ணாரப்பேட்டை
சென்னை 1.

# "மாலை மணி"

★

10—8—49 தொடங்கி
வெளிவரும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்க குருமார்கள், "கிறிஸ்தவமதத்தில் பகுத்தறிவுக்கு இடம் கிடையாது—கிறிஸ்து தேவ குமாரர்! எனவே அவர்தம் அருள் மொழிகள் அத்தனையும் தேவ வாக்குகள்—அவற்றைச் சரியா தவரு என்று நம்முடைய சாதாரண பகுத்தறிவைக் கொண்டு ஆராய்வதே மிலேச்சத்தனம்" என்று கூறியபோது அடலேறு என ஆர்த்து எழுந்து அந்தச் சொற்களை அலசி அலசிஅவற்றை எள்ளி நகையாடிய பெரியார், முஸ்லிம் முல்லாக்கள், "கொரானையுமா குறைசொல்லத் துணிவீர்கள்! கொரான் கடவுள் வாக்கு! எழுத்துக்கு எழுத்து அதனை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமே தவிர பரிசிலனை செய்வதே காபிரித்தனம்" என்று கூறியபோது, "கொரானுயிருந்தால் என்ன, தீவியமாய் இருந்தாலென்ன, என் பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்துவராத கதைகளை நான் ஒப்ப மாட்டேன் என்று இடிமுழக்கமிட்ட பெரியார், சைவச் சீலர்களும் வைணவ நெறி சூரர்களும், "எங்கள் பெரிய புராணத்தையும் ஸ்ரீமத் இராமாயணத்தையுமா எரிக்கமுன்வந்தீர்கள்! பிடிசாபம்!" என்று கூறியபோது "பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதைகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தாமல்வேறென்ன செய்வது?" என்று வீராவேசத்துடன்கேட்டபெரியார், இப்போது **"தங்கள் பகுத்தறிவுக்குச் சிறிது சுதந்தரம் வேண்டும் என்பவர்களுக்கும் எனது இயக்கத்தில் இடமில்லை; நான் சொல்லுவதை ஏற்று நடப்பவர்களுக்கே இங்கு இடமுண்டு"** என்று கூறுகிறாரே, இதுஎன்ன கொடுமை? ஏன் இந்த விபரீதம்?

"நான் சொல்லும் வாசகங்களை அப்படி அப்படியே நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும், நம்பினால் மோட்சம், நம்பாவிட்டால் நரகம் என்று உங்களுக்கு நான் சொல்ல வரவில்லை தயவுசெய்து நான் சொல்வதை நம்பிவிடாதீர்கள்! நன்ருகக் காது கொடுத்து மட்டும் கேளுங்கள். பிறகு, வீட்டிற்குச் சென்று, நிதானமாக இருந்து, ஓய்வாக, அமைதியாக, நான் இப்போது சொல்லியதெல்லாம் சரிதானு என்பதை சிந்தித்துப் பாருங்கள். சரி என்று உங்கள் அறிவிற்குப்பட்டால் அதனை அப்போது ஏற்றுக் கொள்ளுங்கள். தவறு என்று பட்டால், என் அறியாமைக்காகப் பரிதாபப்பட்டு, என் கருத்தை ஒதுக்கிவிடுங்கள்" என்று பெரியார், எண்ணற்ற கூட்டங்களில் எழில்பட இயம்பியிருக்கிருரே, அந்த வாசகங்கள் இப்போதும் நம் செவிகளில் வந்து தங்கள் இன்ப நாதத்தை எழுப்பியபடி இருக்கின்றனவே, அந்த வாசகங்களை மறந்துவிட்டாரா பெரியார்? அவர் மறந்துவிட்டாலும் நாடுமறக்காதே இந்த அரிய வாசகங்களை! தங்கள் பகுத்தறிவுக்குச் சிறிது சுதந்தரம் வேண்டும் என்பவர்களுக்கும் எனது இயக்கத்தில் இடமில்லை என்று இரண்டாண்டுகளுக்கு முன்னரே கூறியிருக்கிறேன் என்று இப்போது கூறுகிருரே பெரியார், இது, இந்த வாசகம், இவர், இதுவரையில் செய்து வந்த பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கிறதே, பிறர் கேலி செய்வரே இந்த வாசகத்தைக் கேட்டால், கூறலாமா பெரியார் இதுபோல?

சங்கராச்சாரியார் கூறலாம், கனம் ராஜகோபாலாச்சாரியார் கூறலாம், காமராஜர் கூறலாம், ஆனல் பெரியார்! அவர்கூறலாமா இதுபோல? 30 ஆண்டுக் காலமாக பகுத்தறிவுப் புயலை நாடெங்கணும் எழுப்பிவந்த இம்மாவீரரா இதைக் கூறுவது? கொடுமை! கொடுமை! உவமை காண முடியாத பெருங் கொடுமை இது! ஆம்! ஆனல் ஒன்று பெரியார், நிலைமையை மிகவும்தெளிவானதாக ஆக்கிவிட்டார்.

திருமணம் ஒன்றுமட்டுமல்ல இப்போதுள்ள பிரச்சினை, பெரியார் நம்மையெல்லாம் அவமானப்படுத்திவிட்டாரே—நம்மை அவமானப்படுத்தியவரை நாம் எப்படி தலைவராக ஏற்றுக் கொள்ளமுடியும் என்பது மட்டும்கூட அல்ல இப்போதுள்ள பிரச்சினை, பெரியார் கூறுவதை முன்பின் யோசிக்காமல்! கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுபவர்களுக்குமட்டுமே கட்சியில் இடம் உண்டு என்று தெளிவாகத் தெரிவித்துவிட்டார். தங்கள் பகுத்தறிவுக்குச் சிறிது சுதந்தரம் வேண்டும் என்பவர்களுக்குக்கூட கட்சியில் இடம் கிடையாது என்று திட்டமாக அறிவித்து விட்டார். இது, நம் அனைவருடைய தன்மான உணர்ச்சியையும் கேலி செய்யும் வாசகம்; ஜனநாயக தத்துவத்தையே, பகுத்தறிவுக் கொள்கையையே ஏற்க மறுக்கும் வாசகம்! தங்கள் சொந்த பகுத்தறிவையே இழந்துவிடச் சம்மதிக்கும் "பரிபூரண பக்தர்கள்" மட்டும்தான் இனி, அவரை, தலைவராக ஏற்றுக் கொள்ளமுடியும். மற்றவர்கள் யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை நன்கு விளக்கும் வாசகம்

பிரச்சினை மிகவும் தெளிவானதாக ஆக்கப்பட்டு விட்டது.

பெரியாரின் தலைமை எவ்வளவு தீமை பயக்கக்கூடியது, எவ்வளவு விரைவில் மாற்றப்படவேண்டியது என்பதை பெரியார் அவர்களே நன்ருக விளக்கி விட்டார்கள்

இன்னமுமா விளக்கம் தேவை என்று, உங்களை அல்ல, நாம் பெரியாரின் தலைமையில் ஏன் நம்பிக்கையை இழந்து விட்டோம் என்பது தங்கட்கு விளங்கவில்லை என்று பாவனை புரிகிருர்களே ஒரு சில விரல்விட்டு எண்ணக்கூடிய பெரியார் பக்தர்கள், அவர்களைத்தான் கேட்கிறேம்.

---


## நீங்கள் விரும்பும் புதிய புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| ருஷ்ய நாட்டு அழகி (இராதாமணாளன்) | 0 | 8 |
| தேவலீலைகள் (அறிஞர் அண்ணாதுரை) | 0 | 8 |
| அண்ணாவின் உவமைகள் | 0 | 8 |
| என்னைக் கவர்ந்த புத்தகங்கள் (C. N. A) | 0 | 2 |
| என்கடன் களிப்பூட்டுதலே (N. S. கிருஷ்ணன்) | 0 | 2 |
| திராவிட இந்தியா | 1 | 0 |
| மூலபலம் முறிகிறது | 0 | 8 |
| இராமராச்சியம் | 0 | 10 |

★

பகுத்தறிவுப் பாசறை,
147, பவழக்காரத் தெரு,
சென்னை 1.

# எதிர்பார்த்தோம்! ஏமாந்தோம்!

இன்பத் திராவிடத்தை சென்ற இரு மாத காலமாக கவ்விக்கொண்டுள்ள வேதனை இருளைப் போக்க நம்பிக்கை நட்சத்திரம் உதயமாகிவிட்டது என்று நம்பினோம்.

புண்பட்ட உள்ளங்களுக்கு ஓர் ஆறுதல் கிடைக்கத் தொடங்கிவிட்டது—இனி, புண் ஆறும், துக்கம் குறையும், வடு மறையும் என்று எதிர்பார்த்தோம்,

தேம்பிக் கிடக்கும் தோழர்களுக்கு நல்லதோர் சேதி கிடைக்கிறது—இனி நிலைமை மாறும—குதூகலம் பிறக்கும்—கொண்டாட்டம் தவழும்—இன்பம் எங்கெங்கும் நடமாடும் என்று எண்ணினோம்.

சிதைந்த குடும்பம் சீர்படும்—பேதம் ஒழிந்து, ஒற்றுமை உணர்ச்சி தாண்டவமாடும்—பிளவுகள் நீங்கி, குரோதம் மறைந்து, கொந்தளிப்பு அடங்கி, பாசமும் நேசமும் மீண்டும் தோன்றும் என்று உண்மையாகவே கருதினோம்.

தவறு செய்த தந்தையும் பிரிந்து நிற்கும் சேய்களும் ஒன்று படும் நாள், நம் உள்ளத்திற்கெல்லாம் பெரியதோர் உவகையை, பூரிப்பை, மகிழ்ச்சியை ஊட்டும் நாள் நம்மை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறது, அந்த நாளிலே நாம் இருக்கும் பேறு விரைவிலேதான் என்று மனமார நம்பினோம்.

தவறு செய்த தந்தை, தன் தவறு காரணமாக தனயர்களையெல்லாம் ஓவெனக் கதறி அழச் செய்த, கதறி அழச் செய்தது மட்டுமல்ல, அவர்கள் கதறி அழ அழ, சுடுசொற்களையும் உள்ளத்தை நோக வைக்கும் வசனங்களையும் துணிந்து வீசிய தந்தை, இதோ தவறை உணரத் தொடங்கிவிட்டார், நிலைமையைச் சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்து விட்டார், தன் தவறு எவ்வளவு பெரிது, எத்தனை ஆயிரவர் உள்ளத்தைப் புண்படுத்தியிருக்கிறது, அதனால் ஏற்பட்ட விளைவு எவ்வளவு பயங்கரமானது என்பதையெல்லாம் உள்ளது உள்ளபடி அறிந்துகொள்ள ஆவல் கொண்டுவிட்டார், தன் தவறுக்காக வருந்தத் தொடங்கிவிட்டார், இனிக் கவலையில்லை, விரைவிலே நிச்சயமாக திருமணத்தை ரத்து செய்துவிடுவார், நம்மையும் அவரையும் பிரித்து வைக்கும் அந்தத் தவறான ஏற்பாட்டை மாற்றிவிடுவார், நாமும் அவரும் ஒன்று கூடுவோம், இது உறுதி உறுதி என்று திடமாக எண்ணினோம். அந்தப் புது நிலைமை என்று வரும் என்று வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தோம்!

"வருத்தமும் விஞ்ஞாபனமும்', என்ற அறிக்கையை "விடுதலை" யில் கண்டபோது, "சமீபத்தில் நான் எனது சொந்த விஷயமாய் மேற்கொண்ட தன்மை பொது மக்களுக்கும், மற்றும் கழகத் தொண்டாகள், அனுதாபிகள் என்போருக்கும் அருவருப்பை உண்டு பண்ணி இருப்பதை நான் மனப்பூர்வமாய்த் தெரிந்து கொண்டேன் என்ற வாசகத்தை நாம் படித்தபோது, "நான் திருமணம் என்பது ஆக ஒன்று செய்துகொண்டதானது, சிலசந்தர்ப்பத்தில் எனக்கு ஏற்படும் அவசரபுத்தி காரணார்த்தமாகவேதான்" என்னும் சொற்றொடர்களைக் கண்டபோது, "பலபேரின் மனக் கசப்பைப் பெற்று விட்டேன்! எனக்கும் மனக்கிலேசம் தான். எனது தொண்டர் ரெத்தின மாணிக்கங்களும், கழக முக்கியஸ்தர்கள் எனப்படுவோரும் இந்தத் திடீர்த் தவறைப் பொறுத்தருள வேண்டும்" என்ற உள்ளமுருக்கும் உன்னதச் சொற்களை நினைத்துப் பார்த்தபோது, பெரியாரின் மனம் மாறத் தொடங்கிவிட்டது—கழகத் தோழர்களின் கண்ணீர் பலன் கொடுக்கத் தொடங்கிவிட்டது—பெரியார், நிலைமையை உணரத் தொடங்கிவிட்டார்—இனி தவறைத் திருத்திக்கொள்வார், திருமணத்தை ரத்து செய்வார், நிச்சயம் செய்வார் என்று உறுதியாக நம்பினோம்.

ஆம்! பெரியாரின் 28-7-49 அறிக்கை நமக்கெல்லாம், நாட்டு மக்களுக்கெல்லாம், கழகத் தோழர்களுக்கெல்லாம் அந்த எண்ணத்தைத்தான் தந்தது, மீண்டும் ஒத்துழைக்கும் நாள் விரைவில்தான் என்ற ஆசை அலைகளைத்தான் எழுப்பிற்று. உண்மைப் பாச உணர்ச்சியைத்தான் உள்ளத்தில் தூவிற்று.

அந்த அறிக்கை அவருடையதாக இருக்காது என்ற எண்ணம், யாரோ சிலர் அல்லது பலர் அவர் பெயரில் எழுதியிருக்கக்கூடும் என்ற சிந்தனை, பெரியார் இராமசாமியின் உண்மை எழுத்துக்களாயிருக்கமாட்டா இவை என்ற நினைப்பு ஒருக்கால் பெரியாருக்குத் தெரியாமல், பெரியாரின் ஒப்புதல் இல்லாமல், அவருடைய சம்மதத்தைப் பெறுமல் வேறு யாரேனும் எழுதி இருக்கக்கூடுமோ என்ற ஐயம் ஒரு துளியும் நமக்கு ஏற்படவில்லை. நமக்கு மட்டுமா, "விடுதலை" அலுவலகத்தாருக்கும் ஏற்படவில்லை, அதன் ஆசிரியர் குருசாமிக்கும் ஏற்படவில்லை, குடி அரசுநிர்வாகிகளுக்கும் ஏற்படவில்லை, பெரியாருடன் நெருங்கிப் பழகியவர்கட்குக்கூட ஏற்படவில்லை—நாட்டு மக்களிலே, யாருக்குமே ஐயம் பிறக்கவில்லை அந்த அறிக்கையைக்கண்டபோது! எனவேதான் நாம் எல்லோருமே அந்த அறிக்கையைக் கண்டதும் உள்ளம் பூரித்துப்போனோம்; நம்பிக்கை நட்சத்திரம் திராவிடத்து வானிலே உதயமாகிவிட்டது என்றெண்ணி துள்ளிக் குதித்து மகிழலானோம்.

ஆனல் எவ்வளவு ஏமாற்றம்! மறுநாள், அந்த அறிக்கை நான் வகுத்ததல்ல, யாரோ செய்த சூது என்று பெரியார் "மறுப்பு"த் தந்தபோது நம் மனம் எவ்வளவு சுண்டிப் போயிற்று! தந்தையும் தனயர்களும் ஒன்றுபடும் நாள் விரைவில் வருகிறது என்ற எண்ணம் எவ்வளவு விரைவில் கருகிப் போயிற்று! இல்லை — மலர்ச்சி இல்லை—மகிழ்ச்சி இல்லை—பாசமும் நேசமும் மீண்டும் தோன்றுவது இல்லை—தந்தை தன் தவறை உணரவில்லை — பழையபடிதான் இருக்கிறார், நம்மை, தொண்டர்களை, தோழர்களை, கட்சி உறுப்பினரை, ஆயிரமாயிரம் காளைகளை அலட்சியப்படுத்தியபடிதான் இருக்கிறார், அவமானப்படுத்தியபடிதான் இருக்கிறார்—அவா மனம் மாறியதாக நாம் எண்ணியது பிழை, அவர் மனம் மாறவில்லை என்பதையெல்லாம் நாம் அறிந்தபோது நம் உள்ளத்தில், முதல் நாள் அறிக்கையைக் கண்டு கொந்தளித்துக்

கொண்டிருந்த நேச அலைகள்; பாச உணர்ச்சிகள் எல்வளவு வெட்கமும் துக்கமும் அடையலாயின!

எவ்வளவு எதிர்பார்த்தோம் நாம்! எவ்வளவு ஏமாந்தோம்! பெரியார் நிலைமையை அறியத் தொடங்கிவிட்டார், தவறை உணரத் தொடங்கி விட்டார், தவறைத் திருத்திக்கொள்ளவும் தயாராகி விடுவார், கழகத்தை இனியும் நடத்த அவர் முனைவார், இனியும் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்துவதற்குரிய தகுதியை அவர் பெறுவார் என்றல்லவா நாம் எதிர்பார்த்தோம்! கட்சித் தோழர்களின் கண்ணீரை மதிக்கும் கண்ணியத்தை அல்லவா அவரிடம் நாம் எதிர்பார்த்தோம்! திராவிடர் கழக உறுப்பினர்களின் ஏகோபித்த கண்டனத்திற்கு செவி சாய்ப்பார், ஜனநாயகப்பாதையில் நடப்பார், எதேச்சாதிகாரப் போக்கைக் கைவிடுவார், சர்வாதிகாரச் சிந்தனையை தன் மனதிலிருந்து அகற்றிவிடுவார் என்றல்லவா எதிர்பார்த்தோம்! நம் அருமை இயக்கத்திற்கே சவக்குழி தோண்டும் போக்கில் போய்க்கொண்டிருக்கும் விபரீதத்தை, வேதனை மிகுசெயலை, விசித்திரப் பணியை நிறுத்தி விடுவார், நல்வழி புகுவார், நேர்மைப் பாதைவழி நடப்பார் என்றல்லவா நாம் எதிர்பார்த்தோம்! அது எவ்வளவு தவறு! எவ்வளவு பேதமை!!

ஆனால் அந்த அறிக்கை! அது பெரியார் எழுதியதல்ல வாமே! வேறு யாரோ எழுதியதாமே!

எப்போதோ எதற்காகவோ அவர் தன் கையெழுத்தைப் போட்டுக்கொடுத்த வெற்றுத் தாளில் யாரோ, ஏனோ, இதுபோல எழுதி அனுப்பி, "விடுதலை" அலுவலகத்தாரை ஏமாற்றிவிட்டார்களாமே!

நம்மால் நம்பவே முடியவில்லையே பெரியாரால் எழுதப்படவில்லை அந்த அறிக்கை என்னும் கூற்றை! என்றாலும் பெரியார் அல்லவா கூறுகிறார் இதுபோல! நாம் நம்பித்தானே ஆகவேண்டும்!!

"குடிஅரசு" பத்திரிகையைபெரியார் தொடங்கிய காலத்திலிருந்து அவருடைய எழுத்துக்களை விடாது படித்து வருபவர்கள் இருக்கிறார்கள்; இருபது ஆண்டுகளாக, முப்பது ஆண்டுகளாக அவருடைய தமிழ் நடையைப் படித்துப்படித்து அந்த நடையின் ஒவ்வொரு அசைவையும், ஒவ்வொரு போக்கையும், ஒவ்வொரு சிறு நுணுக்கத்தையும் தெள்ளத்தெளிய உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அவரால் தீட்டப்பட்ட ஏதாவது ஒரு கட்டுரையைப் படித்தால் அந்தக் கட்டுரையின் தலைப்பிலோ அடியிலோ அவர் பெயர் குறிப்பிடப்பட்டில்லா விட்டாலும் அது அவர் தீட்டியதுதான் என்பதை, கட்டுரையை, நுனிப்புல் மேய்வதுபோல படித்துவிட்டுக்கூட, திடமாகக் கூறக் கூடியவர்கள் தமிழகத்தில் ஏராளமாக இருக்கிறார்கள். பெரியாரால் எழுதப்பட்டது இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களாகவே இருந்தாலும், அது, தனியாக, துண்டாக முன்பின் தொடர்பின்றி வெளியிடப்பட்டாலும், அது வேறு யார் பெயரிலே வெளியிடப்பட்டிருந்தாலும், அதனை எழுதியவர் பெரியார்தான் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கூடியவர்கள் எண்ணற்றபேர். இவர்கள் அத்தனை பேருக்குமே அந்த அறிக்கையைப் படித்தபோது, அது பெரியார் எழுதியதுதான் என்பது நிச்சயமாகத் தோன்றிற்று. மறுநாள், பெரியாரின் மறுப்பு வந்தபோதுகூட, இதென்ன வேடிக்கை அந்த அறிக்கையின் தமிழ் அசல் பெரியாரின் தமிழாகத்தானே இருக்கிறது! அசல் அவரைப்போலவே எழுதக் கூடியவர்கள்கூட தமிழகத்தில் வேறுமுண்டா என்றுதான் அவர்களெல்லாம் கூறலாயினர்—ஆச்சரியத்துடன்! திகைப்புடன்!

அந்த அறிக்கை எழுதப்பட்டுள்ள முறை, அதில் உள்ள வாக்கியங்கள் உருண்டு செல்லும் போக்கு, வாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், அந்தச் சொற்கள் அங்கே பின்னிக்கிடக்கும் வகை, அந்தசொற்கள்—சொற்றொடர்கள்—வாக்கியங்கள் இவற்றின் பின்னே மறைந்து நின்று நம்மை அடக்கிக் காட்டும் அந்த அதிகார தோரணை, வாக்கியங்களோடு வாக்கியமாக இரண்டறக் கலந்து நிற்கும்ஒருவித அலட்சியப் போக்கு, இவை அத்தனையும் பெரியாருக்கென்றே அமைந்துள்ள ஒருவித தனியான, அலாதியான, குறிப்பிட்ட ஒரு போக்கிலேயே உள்ளன என்பதை. பெரியாரின் தமிழ் நடையை அனுபவித்து அறிந்த எவரும் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். எனவேதான் மறுப்பைக் கண்டபிறகும்கூட, முதல் நாள் அறிக்கை பெரியாரால் எழுதப்பட்டதல்ல என்னும் கருத்தை எத்தனையோ பேரால் சிறிதும் நம்பவே முடியவில்லை.

முதல்நாள் அறிக்கை நமக்கு எவ்வளவோ களிப்பை ஊட்டிற்று! நம் சிந்தனையில் செந்தேன் பாய்ச்சிற்று! பேதம் தீரும் நாள் இனி விரைவில்தான் என்பதை எண்ணி எண்ணி எவ்வளவோ பூரிப்படைந்தோம் நாம்! ஆனால் அந்த அறிக்கை அவருடையதல்லவாம் என்பதைக் கேள்விப்பட்டதும், நம் சிந்தனை

(10-ம் பக்கம் பார்க்க)


## சாரதி பரிமளப் பாக்குத்தூள்

பீடன் பாக்கு கொண்டு தயாரிப்பு. நறுமணமுள்ளது, உடல் நலத்திற்கு உகந்தது. பதிவும், நற்சாட்சி பத்திரமும் பெற்றது. பாக்கெட் 1க்கு அணா 9.

SARATHI SCENTED NUT POWDER MADRAS REGISTERED No 133024

விற்பனையாளர்கள் தேவை

### சாரதி பரிமளப் பாக்குத்தூள் அலுவலகம்

80 வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை 1

தயாரிப்பு: R. அங்கமுத்து


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)